# தங்கள் இரட்சிப்பை சந்தேகிக்கிறவர்களுக்கான நம்பிக்கை - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், இதுவரை கேட்கப்பட்ட  மார்க்கம் சார்ந்த கேள்விகளை பார்க்க இருக்கிறோம்: உங்களுடைய நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்ற நிச்சயத்தோடு இருப்பது எப்படி?

**டாக்டர். எர்வின் லட்சர்:** நீங்கள் மரித்த அடுத்த விநாடியில் ஒருவேளை அழகான சூழலை, கிறிஸ்துவின் மகிமையை பரலோகத்தில் காண்பீர்கள். அல்லது நீங்கள்   இன்று கற்பனை செய்து பார்க்க முடியத் பயங்கரமான சூழலை காண நேரிடும். அதை  குறித்து யோசிப்பதை நிறுத்திவிட்டாலும், நமக்குள் எழும்பும் முக்கிய கேள்வி இதுதான், என்னுடைய நித்தியத்தை எங்கே செலவிடபோகிறேன்?

**அறிவிப்பாளர்:** இந்த கேள்விக்கு பதிலளிக்க இருப்பவர் ஜானுடைய இன்றைய விருந்தினர் டாக்டர் எர்வின் லட்சர், மூடி மெமோரியல் திருச்சபையின் தலைமை போதகர் சிகாகோ இல்லிநோசிஸ்.

இவர் மேலும் சில கேள்விகளுக்கும் பதில் அளித்திடுவார்:

ஆதியில் தேவனோடு உறவு வைத்து விசுவாசிகளாக இருந்த பின்னர் தங்கள் வாழ்வில் பின்வங்கியவர்களை குறித்து வேதம் என்ன போதிக்கிறது?

ஒரு கிருஸ்துவன் தன்னுடைய பாவங்களை அறிக்கையிடாமல் மரிக்கும் போது  தேவன் அவனுக்காக செய்த செயல்களை ரத்து செய்திடுமா?

நாம் இன்றைக்கு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் நாளைக்கும் என்றன்றைக்கும் இரட்சிக்கப்பட்டிருக்கும் நிச்சயம் நமக்கு இருக்கிறதா?

இந்த விசேஷித்த நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இது ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சி

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான் ஒரு கேள்வியை வைத்திருக்கிறேன். உங்களுடைய கிறிஸ்தவ விசுவாசத்தை எப்போதாவது சந்தேகித்ததுண்டா? அப்படி இதுவரை சந்தேகப்படாதவராக இருந்தால், தயவுசெய்து சேனலை மாற்றிக்கொள்ளுங்கள். சந்தேகப்படுகிரவராக இருந்தால், இந்த நிகழ்ச்சி உங்களுக்கானது. இன்றைக்கு என்னுடைய நண்பர் விருந்தினர், டாக்டர். எர்வின் லட்சர், சிகாகோவில் மூடு மெமோரியல் சபையின் போதகராக இருக்கிறார்.

சரி எர்வின், பல கிறிஸ்தவர்கள் சந்தேகிக்கிறார்கள். ஒரு சில காரியங்களை வைத்து சொல்லும்போது எல்லா கிறிஸ்தவர்களும் சந்தேகிக்கிறார்கள் என்று சொல்லலாமா?

**லட்சர்:** நீங்க சந்தேகப்பட்டிருக்கீங்களா, ஜான்?

**ஆன்கர்பெர்க்:** சந்தேகப்பட்டிருக்கேன். என்னக்கே அது நல்லா தெரியும். உண்மை என்னனா, வரலாற்றில் சில மனிதர்கள் பார்க்க முடியும் - பல சிறந்த கதைகள் இருக்கிறது, பயங்கரமானவை, விசுவாசிகளை பற்றியது, அவை சந்தேகத்தாலானவை. அதை பற்றி சொல்லுங்க.

**லட்சர்:** அவருடைய பெயர் வில்லியம் கவ்பேர். நம்மில் பலருக்கு அவரை தெரிந்திருக்கும் ஏனென்றால் அவர் அமேசிங் கிரேஸ் பாடலை எழுதிய ஜான் நியுடனின் நண்பர். வில்லியம் கவ்பேர் இந்த வார்த்தைகளை எழுதிய அன்று இராத்திரியில், "தேவன் அதிசயிக்க தக்க விதமாய் அசைவாடுவார், அற்புதங்களை நிகழ்த்திடுவார். தன்னுடைய பாத சுவட்டை கடலில் பதித்திருக்கிறார், புயல்களை அடக்கிவைக்கிறார்." அன்று இரவு, தற்கொலை செய்து கொள்ள அவர் தீர்மானித்திருந்தார். உண்மையில் சொல்லப்போனால். கவ்பேர் நான்கு முறை தற்கொலை செய்து கொள்ள முயற்சித்திருக்கிறார், இன்னொரு பாடலையும் எழுதிருக்கிறார், என்னுடைய புத்தகத்தில் அதை குறிப்பிட்டிருக்கிறேன், மதியீனமாக இருத்த நேரத்தில் எழுதப்பட்ட

வார்த்தைகள். என்ன நடந்ததென்றால் தன்னையே கொன்றிட முடிவு செய்தார். அப்படி அவரால் செய்துகொள்ள முடியாமற்போனபோது, அவர் யுதாவை விட முகவும் மோசமான நிலையில் இருப்பதாக நினைத்தார்.

இவை, அனைத்தும் ஒரு நபர் ஒரு உண்மையை கண்டறியும் அவரை அவர்களுக்கு பிரயோஜனப்படாது. அவர் எழுதிய இன்னொரு பாடல், “இரத்தம் நிறைந்த ஊற்று இருக்கிறது, இம்மானுவேலின் நரம்பிலிருந்து சொரிகிறது, பாவிகள் அந்த வெள்ளத்தில் மூழ்கிடுவார்கள், குற்ற உணர்வை களைந்திடுவார்கள்.” உலகமெங்குமுள்ள சுவிசேஷகர்கள் இந்த பாடலை நினைவில் வைத்திடுவார்கள். இன்னொரு பாடல் வரியும் இருக்கிறது, “மரித்துக்கொண்டிருக்கும் கள்வன் ஆனந்தத்தால் நிறைந்திருக்கிறான், நானும் அங்கிருப்பேன், அவர் என்னுடையா பாவங்களை கழுவி என்னைவிட்டு அகற்றினார்.” இவர் சந்தேகப்பட்டு சந்தேகத்தோட மரித்தார்.

இரட்சிக்கப்பட்டிருன்தாரா? நீங்க, அவருடைய நண்பர்கள் மற்றும் அவர் தெரிந்தவர்களிடம் பேசினால், அவர்கள் சொல்வது, “நிச்சயமாக! இவர் தேவனை மிகவும் நேசித்தவர். இவர் அவருடைய இரட்சிப்பை குறித்து கரிசனையோடிருந்தார். இவர் இரட்சிக்கப்பட்டிருப்பதை உறுதி செய்துகொள்ள தனால் ஆன அனைத்தையும் செய்தார். ஆனா ஏதோவொரு திடமான காரணத்தால், ஒருவேளை அவர் சிறுவயதில் கடுமையாக நடத்தப்பட்டதால் இருந்திருக்கலாம் - அதற்கான சில

ஆதாரங்கள் இருக்கிறது - அவரால் தேவனுடைய அன்பை ஏற்றுக்கொள்ள முடியாம போயிருக்கிறது. அவர் மன்னிக்கமுடியாத பாவங்கள் என்ற எண்ணத்துடன் அதிகமாய் போராடிக்கொண்டிருந்தார், அதை பற்றி பேசியாக வேண்டும் ஏனென்றால் சிலருடைய எண்ணம் நான் மன்னிக்க முடியாத பாவத்தை செய்துவிட்டேன் என்பதுதான். நற்செய்தி இதுதான் ஒருவர் ஒருவேளை இப்படி பட்ட நிலையில் இருப்பதை அறிந்துகொண்டால்  என்ன தோன்றும் என தெரியுமா அவன் மன்னிக்க முடியாத பாவத்தை செய்திருப்பதால், தேவனுக்கான விருப்பமும் மன்னிப்பைப்ரும் எண்ணமும் இல்லாமறபோகும். மன்னிக்கமுடியாத பாவத்தை செய்திருப்பதாக நினைக்கும் பலருடைய கடிதங்களை நான் பெற்றிருக்கிறேன்.

இங்கு தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப்பட்ட நபர் இந்த பாடல்களை எழுதியவர். என்னுடைய லைப்ரேரியில் கிட்டத்தட்ட அவருடைய எல்லா பாடல்களையும் சேகரித்து வைத்திருக்கிறேன். அவர் சொன்னது நினைவிருக்கிறது, “கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்காக நிகழ்த்திய அனைத்தையும் பார்க்கும்போது,” இந்த அழகான வரிகளை எழுதியது கவ்பேர் தான், “என்னை பற்றி எப்படி உங்கள் இப்படி யோசிக்க முடியும் என் தேவனாக இருக்கிறீர், என் அறிவிற்கு கார்மேகமாயும் என் இருதயத்திற்கு சூரியோதயமாயுமிருக்கிறீர்.” கேள்வி என்னனா, என அவர் சந்தேகபட்டார்?

**ஆன்கர்பெர்க்:** யா. இப்ப கவ்பேரை பற்றி பார்பதற்கு முன்பு, நீங்க உங்க புத்தகத்தில் சொல்லியிருக்கும் ஒன்றை பார்க்கலாம், "ஒருவர் எந்த ஒரு காரணத்தினாலும் தன்னால் இரட்சிக்கபடமுடியாது என்று நினைப்பதைவிட அழுத்தத்தின் தாக்கமும் வெறுமையின் ஆழமும் வேறோண்டிலும் இருக்காது என்றிருக்கிரீர்கள்.

**லட்சர்:** ஆமாம்.

**ஆன்கர்பெர்க்:** அதைப்பற்றி தான் பேச நினைக்கிறேன். ஜனங்கள் என்ன காரணங்களுக்காக சந்தேகப்படுகிறார்கள்? உங்க புத்தகத்தில் இதைப்பற்றி சொல்லும்போது நீங்க சொன்ன ஒரு விஷயம். ஜனங்களின் அறிக்கை, "நா எப்ப இந்த தீர்மானத்தை எடுத்தேன் என்று தெரியல. இந்த ஜெபத்தை செய்த நியாபகம் என்னக்கு இல்லை. நஅந் இரட்சிக்கப்பட்டிருக்கிறேனா?

ரைட், சந்தேகத்திற்கான சில காரணங்களை பார்க்கலாம் அதன் பிறகு கவ்பேரை பற்றி பார்க்கலாம் அவரை அப்படியே விடமுடியாது இல்லையா.

இப்படிப்பட்ட சந்தேகபேர்வளிகளுக்கு நாம் உதவிட வேண்டும் அவரும் சந்தேகபிராணியாக இருந்தார்.

முதலாவதாக, அவர்களுடைய உரையாடலின் பொது. நிச்சயமம. பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு எப்போது இர்ழ்ட்சிக்கப்பட்டோம் என்பது தெரிந்திருக்கும். நா பன்ன்ஜியில் ஒரு சேருக்கு அருகில்

முட்டிபோட்டு இயேசுவை ஏற்றுக்கொண்டது நியாபகம் இருக்கு. பலருக்கு அந்த நியாபகம் இருப்பதில்லை. ஆனா ஒரு விஷயத்தை சொல்லுகிறேன், நீங்க இரட்சிக்கப்பட்டது எந்த நாள் எத்தன மணிக்கு அன்றைக்கு என்ன ட்ரெஸ் அணிந்த்திருந்தீங்கன்றது முக்கியம் கிடையாது. கேள்வி இதுதான், கிறிஸ்துவின் மீதுள்ள உங்களுடைய விசுவாசம், அவர் ம்ரீது முழுமையாக இருக்கிறதா?

மற்றொரு காரியத்தையும் பார்க்கலாம்: தவறான போதனை. முந்தைய நிகழ்ச்சிகளில் அதை பற்றி பார்த்தோம். ஒரேஒரு காரியத்தை இங்கே சொல்கிறேன் - நீங்கள் பாவம் செய்யும் போது அல்லது தவறான பாதையில் சென்றால் இரட்சிப்பை இழந்திடுவீர்கள்.

**ஆன்கர்பெர்க்:** ஆமாம். இது முற்றிலும் தவறான போதனை. இன்னொன்றையும் நான் சொல்கிறேன்: இயேசுவை நாம் நம்முடைய இருதயத்திற்குள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**லட்சர்:** ஆமா. இப்ப ஜனங்கள் இயேசுவை தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்வதால் இரட்சிக்கப்படுகிரார்கள், ஆனா இது தவறான வழிமுறை, தானே, ஜான், ஏன்னா நாம் கிறிஸ்துவை நம்முடைய பாவங்களை ஏற்றுக்கொண்டவர் என்பதை விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறோமா என்பதுதானே முக்கியம். எனவே இதெல்லாம் முற்றிலும் தவறான உபதேசம்.

குற்றஉணர்வு. ஒருவர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருந்தும் ஒரு கட்டத்தில் அவர் தவறானதை செய்கிறார், ஒருவேளை பாலியல் பாவமாக இருக்கலாம், அவனுக்கு என்ன தோன்றும்? நீ ஒரு கிறிஸ்தவனா?

**ஆன்கர்பெர்க்:** ஆமா. பிசாசு நிச்சயமா இந்த எண்ணத்தை அவன் சிந்தனையில் வித்திடுவான். நீ ஒரு உண்மையான கிறிஸ்தவனாக இருந்திருந்தா இப்படி ஒரு தவற செய்திருக்க மாட்ட என்றிடுவான்."

**லட்சர்:** ரைட். இப்ப, இதனுடைய விளைவாக, என்ன நடக்கிறதென்றால், ஜனங்களுடைய மனதிற்குள் சந்தேகம் புகுந்துவிடும்.

விசுவாசத்திற்கும் உணர்வுகளுக்கும் இடையிலான குழப்பம். அதாவது, லூத்தர் ஒருமுறை சொன்னார், "இரட்சிக்கப்பட்ட உணர்விருக்கிறதா என்றார். மேலும் அவர், "இல்லை, இரட்சிக்கப்பட உணர்வு என்னக்கு இல்லை, ஆனால் தேவனுடைய வார்த்தையில் எனக்கு இருக்கும் நம்பிக்கை என் உணர்வுகளைவிட பலமானது என்றார். இது ஒரு சிறப்பான ஆலோசனை என்று நினைக்கிறேன். எல்லாவட்ட்ருக்கும் இறுதியில் நாம் செய்யவேண்டிய ஒரேயொரு விஷயம் என்னவென்றால் தேவனுடைய வார்த்தைகள் மற்றும் அந்த வார்தைகளின் வாக்குத்தத்தத்தின் உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டுமே தவிர  உணர்வுகளை சார்ந்திருக்க கூடாது. உணர்வுகளும் அவசியம் தான் மேலும் அவை விசுவாசத்தையும் உண்மையையும்

சார்ந்திருக்க வேண்டுமென நினைக்கிறேன், ஆனால் இது நம்முடைய உன்னர்வை சார்ந்த்ததல்ல. நம்முடைய விசுவாசத்தை சார்ந்த்தது.

இன்னொரு விஷயத்தையும் நான் உங்களுக்கு சொல்லுகிறேன், அதாவது, சந்தேகபேர்வளிகள். அப்படிப்பட்டவர்களுக்கு உதவிடும் முன்பு மறுபடியும் கவ்பேரை பற்றி பார்த்திடலாம். அதற்கு முன்பு, லூத்தர் சொன்னதை சொல்கிறேன். லூத்தர் சொன்னார், "ஒரு பர்ஸ் முழுவதும் பணம் இருந்தால் நான் அதை நடுக்கத்தோடு பிடித்துக்கொண்டிருப்பேன் அல்லது தைரியமுள்ளவனாக பிடித்திருப்பேன். எப்படி இருந்தாலும், பர்சுக்குள் இருக்கும் விஷயத்தை அது பாதிக்காது." எளிமையான கருத்து இதுதான், இதைதான் இந்த திடரில் பார்த்துவருகிறோம், சந்தேகங்களோடு நடுக்கத்தோடு இயேசுவை விசுவாசிப்பத சிறந்ததாகும், தவறான ஒன்றை நம்பி அதையே விசுவாசிக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை. ஏனென்றால் எல்லாவற்றிலும் இறுதியாக, நம்பிக்கையல்ல, எத்தன மீது நம்பிக்கை என்பதுதான் முக்கியமானதாக இருக்கிறது என்பதை ஜனங்களுக்கு தெரிவிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** அடுத்த நிலைக்கு போகலாம். சந்தேகபேர்வளிகளுக்கும் வேண்டுமென்ற சந்தேகிக்கிரவர்களுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன.

**லட்சர்:** சரி, இதை நாம் சொல்ல காரணம் என்னவென்றால் சிலர் நம்பாமல் இருக்க தீர்மானிக்கிறார்கள். கற்பனையான சில

சக்குபோக்குகளை அவர்கள் யோசிக்கிறார்கள். அதனால, இப்படிப்பட்டவர்களை ஒன்றும் செய்ய முடியாது அவர்களை தேவனுடைய வார்த்தையை அதிகமாக வாசித்து தியானிக்க உர்ச்சகப்படுத்திடாம் ஏனென்றால் நம்பக்கூடாது என்ற முடிவோடு இருக்கிறார்கள், யாரும் அவர்களுடன் வாக்குவாதம் செய்து நம்பச்செய்ய முடியாது. இவர்கள் உண்மையாய் சத்தியத்தை தேடுகிறவர்களுக்கு முற்றிலும் மாறுபட்டவர்கள், அவர்கள், "எனக்கு சத்தியம் என்னன்னு தெரியாது ஆனா அதை அறிந்துகொண்டு அதை அப்பியாசப்படுத்திடுவேன். வேடத்தை வாசிக்கும் போது இயேசுதான் தேவனுடைய வார்த்தையானவர் அவர்தான் தேவனுடைய குமாரன் என்று உணர்த்தப்பட்டால் நஅந் ஏற்றுக்கொள்கிறேன் என்ன தாழ்த்துவது பிடிக்காவிட்டாலும், சிலுவை என்னக்கு விருப்பமில்லாவிட்டாலும் சிகிறேன் என்பார்கள்." அது வித்தியாசமான சந்தேகம். கிறிஸ்தவரான ஒருவர் கிறிஸ்துவை விசுவாசிக்கவும் அவரில் நம்பிக்கையை இருக்கவும் விருப்பம்கொன்னு அவருடைய அற்புதங்களை குறித்து தயங்கினால் இது  நான்  நம்பமாட்டேன் என்று சொல்லுகிறவர்களுக்கு வித்தியாசமானவர்களாக இருக்கிறார்கள்.

**ஆன்கர்பெர்க்:** யா. அடுத்த விஷயத்தை பார்க்கலாம்: தளர்ந்த விசுவாசம் மற்றும் தவறான் விசுவாசம்.

**லட்சர்:** மறுபடியும் நாம் முக்கியமான ஒரு காரியத்தை பார்க்க இருக்கிறோம், உங்க விசுவாசம் எவ்வளவு தளர்ந்த்ததாக இருந்தாலும்

சரி உங்களுக்கு தெரியும், இயேசு சொல்லியிருக்கிறார், "கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் போதும். கடுகளவு போதுமானது (மத்தேயு 17:20), அது போதும். உங்க விசுவாசம் சரியான நபர் மீது இருந்தா போதும், அது சிறப்பாக இருக்க அவசியமில்லை. ஆனா உங்கள இரட்சிக்க முடியாத உலக காரிங்கள் மீதும் நீங் திடமான நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வைத்திருந்தாள் நீங்கள் நித்தியமாக இழந்திடுவீர்கள். எனவே நாம் அடிக்கடி இதை சொல்லிக்கொண்டிருக்க முடியாது விசுவாசம் போதாது, எதை விசுவாசிக்கிறீகள் என்பதுதான் அதிக முக்கியமானது.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இப்போதும் நாம் சந்தேகத்துடன் இருப்பவர்களுக்கு உதவிடும் படியாக நிற்கிறோம். அதிக உள்ளுவர்வூடு இருப்பவர்களுக்கு நீங்க என்ன சொல்ல விரும்புகிரீங்கன்னு சொல்ல முடியுமா?

**லட்சர்:** அதாவது, எங்க சபையிலும் அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். எனக்கு நினைவிருக்கிறது ஒரு நபருக்கு ஆலோசனை கொடுத்தேன், அவர் கிறிஸ்தவர் என்று எல்லாருக்கும் தெரியும் ஏன்னா, அவரிடம், விசுவாசத்தின் கனிகள் காணப்பட்டது. கிறிஸ்துவை நேசித்தார். அந்த நம்பிக்கைக்கு அவரிடம் பல காரணங்கள் இருந்தது, இருந்தாலும், அவரிடம், சில உளவியல்சார்பான காரணங்களால் - ஐவரும் இன்னொரு கவ்பேர். அவநம்பிக்கையின் உணர்வு, அவருடைய கருத்து, "நா போதுமான அளவுக்கு விசுவாசிக்கிறேனான்னு எனக்கு

தெரியல. கிறிஸ்துவை நான் நம்புகிறேன் ஆனால்," உங்களுக்கு தெரியுமா, அவருக்கு உதவும்படி அவாரோடு சேர்ந்து பல நாட்களை களித்ஹ்டிருக்கிறேன் புரிந்துகொள்ள வைக்க முயற்சித்திருக்கிறேன்.

இவர்களிடைய பாவங்களை குறுக்கி காண்பிப்பதால் இவர்களை நம்பவைக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். சிலருடைய பேச்சு எப்படி இருக்குமென்றால், "ஓ, நாம, இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று தெரியும். பாவம் செய்வோம் என்பது உண்மை, ஆனால், உங்க, பாவங்கள் அவ்வளவு பெரிதனதல்ல." நா அப்படி சொல்லவதில்லை. நாம் என்ன செய்யவேண்டுமென்றால் ஜான், கிருபையை எடுத்துரைக்க வேண்டும். வரலாற்று ரீதியாக சுவாரஸ்யமான ஒன்று இருக்கிறது தெரியுமா. லுத்தருடைய நண்பர் மார்டின் லுத்தருக்கு ஒருமுறை எழுதியிருந்தார், "லூத்தர், நான் செய்த காரியத்திற்காக என்னை என்னால் மன்னிக்க முடியாது, (ஒருவருக்கு தவறான ஆலோசனையை கொடுத்திருக்கிறார்), நான் சோர்ந்திருக்கிறேன் என்றார்." லூத்தர் அதற்கு, "பாரு சுபாலாடின், உன்னுடைய பாவம் அவ்வளவு பெரிதல்ல. அதை பற்றி கவலைபடாதே என்று சொல்லவில்லை." மாறாக அவர், "சுபாலாடின், நீ ஒன்றை கற்றுக்கொள்ள வேண்டும். உண்மையான பாவங்களுக்கு உண்மையான இரட்சகரை பெற்றிருக்கிறோம். என்றதோடு, இயேசு சாதாரண சிறிய பாவங்களுக்காக மட்டும் மரிக்கவில்லை. ஓ இல்லை சுபாலாடின்! மறுக்க முடியாத அக்கிரமங்களுக்க்காகவும் மரித்தார் என்றார்."

இந்த நபர் என்னிடம் வந்து அவர் சொன்னார், “பாருங்க, நான் ஒரு கிறிஸ்தவன் ஆனா நா செய்த பாவங்களை பாருங்கள். நா அவரிடம் அந்த பாவங்கள் பெரிதானதல்ல என்று சொல்லவில்லை. அவரிடம் என்ன சொன்னேனென்றால், “உங்களுக்கு, ஒன்று தெரியுமா? இயேசு மரித்தபோது தேவனுடைய கிருபை எல்லா பாவங்களுக்கும் போதுமாதாக இருக்கிறது, உங்களுக்கும் உண்டு என்றேன்.” அவர்கள் கிறிஸ்துவின் பக்கமாக திரும்பிட நீங்களும் உதவிட வேண்டும். வக்குத்தத்தங்களின் நம்பிக்கையை பிடித்துக்கொண்டு விசுவாசத்தில் வளர்ந்திட அவர்களுக்கு உதவிட வேண்டும். இப்படி செவதால் ஜனங்கள் சந்தேகத்தை மேற்கொள்ள உதவிட முடியும்.

ஆனால் நற்செய்தி என்ன என்பது தெரியுமா? சரி, முதல்ல துர்செய்தியை சொல்கிறேன். துர்செய்தி என்னவென்றால் கவ்பேர் கடல்சியில் விசிவாசக்குரைவோட மரிதுபோனார். நற்செய்தி என்னவென்றால், அவருடைய நம்பிக்கை கிறிஸ்துவின் மீது மாத்ரம் இருந்தால் போதும். அவருடைய சந்தேகங்கள் மத்தியிலும் இரட்சிப்படைய முடியும். எனவே, விசுவாசம் என்பது முற்றிலும் சந்தேகங்களை விளக்கி வைப்பதன் அவசியத்தை எடுத்துரைக்கவில்ல என்றே சொல்லுவேன். இடைவேளைக்கு பிறகு நான் வசனங்களில் இறுதி சில உதாரணங்களை உங்களுக்கு எடுத்து சொல்ல விரும்புகிறேன்.

**ஆன்கர்பெர்க்:** யா. நீங்க இப்ப சொன்னது நர்செய்திதான் என்று நினைக்கிறேன். இடைவேல்லைக்கு செல்வதற்கு முன்பு, இப்போது நாம் ஒருநிமிடம் இன்றைக்கு நம்முடைய நிகழ்ச்சியை நீங்கள் பிரசங்கிப்பதை சிறையிலிருக்கும் நண்பர்கள் வானொலி மூலமாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை கேட்டுக்கொண்டிருக்கிரவர்கள் இதனை நன்கு கவனித்து நம்மை கடிதங்கள் மூலமாக தொடர்பு கொள்கிறார்கள் அவர்களில் சிலர் சிறுவர்களை பலாத்காரம் செய்தவர்கள், கற்பழிப்பாளர்கள், கொலைகாரர்கள் இருப்பார்கள். அல்லது சமீபத்ஹ்றடில் விவாகரத்தானவர்கள், அல்லது விவாகத்தில் போராடிக்கொண்டிருப்பவர்கள் இருக்கலாம். குழியில் இருப்பது போல உணருகிறார்கள். ஓகே? கேளுங்க, தேவன் அவர்களை நேசிக்கிறார் அவர்களுடைய பாவங்களை மன்னித்திருக்கிறார், அதை கிறிஸ்துவின் மீது சுமத்தினார் என தெரியும். இடைவேளைக்கு முன்பு அவர்களுக்க சில வார்த்தைகளை சொல்லுங்க.

**லட்சர்:** ஜான், ஒருவேளை ஹிட்லர் மரிப்பதற்கு முன்பு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்தால் இரட்சிக்கப்பட்டிருக்க வாய்ப்பிருக்கிறது. நான் இதை ஒருமுறை ஒருவருடன் பகிர்ந்துகொண்டேன், அவர் மிகவும் கோபமடைந்தார். அவர் என்னிடம், இப்படிப்பட்ட மனிதனை இரட்சிக்கிற தேவன் எப்படிப்பட்டவராக இருப்பார், அவன் துன்மார்க்கன் தானே என்றார். இதற்கான பதில் என்னவென்று உங்களிக்கு தெரியுமா? தேவன் இயேசு சிலுவையில் மரித்த பொது செய்த காரியத்தையே

சிந்தித்துகொண்டிருக்கிறார் அதனால ஹிட்லரானாலும் எந்தா பாவியானாலும் கிறிஸ்துவை தங்கள் பாவங்களை சுமந்தவராக ஏற்றுக்கொண்டால் மன்னிப்பை பெறமுடியும். இயேசு கிறிஸ்துவின் கிரியை அந்த அளவிற்கு பூரணமாக செய்து முடிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் தன குமாரனை வெறுக்கும் நல்வர்கள், வரி கட்டுபவர், ஒழுக்கத்தோடு இருப்பவர்களை தேவன் மன்னிப்பதில்லை. எல்லாவற்றிலும் இயேசுவும் அவர் செய்து முடித்த செயலும் இடைபடவேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** வெல், இந்த காரியத்தில் என்னுடைய கவனத்தை ஈர், எர்வின். இது அசைக்கமுடியாத அப்பட்டமான உண்மை. இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம், நாம் திரும்ப வந்ததும், விசுவாசத்தில் உறுதியாயிருந்த சிலரை குறித்து பார்க்க இருக்கிறோம், வேடாகமத்திலும் சந்தேகிக்கிறவர்கள் இருந்தார்கள். நீங்க கிறிஸ்தவராக இருந்தும் சந்தேகிக்ககூடும். நாம் திரும்ப வரும்போது இதை பற்றி பார்த்திடலாம்.

*****

**ஆன்கர்பெர்க்:** மீண்டும் வருக. உங்க கிறிஸ்தவ விசுவாசத்தை எப்போதாவது சந்தேகித்ததுண்டா? குட். நீங்க அப்படி செய்ததற்காக சொல்லல, ஆனா நீங்க செய்ததை ஒப்புக்கொண்டதற்காக தான் நான் அப்படி சொன்னேன். எர்வின், சந்தேகத்தோடு இருக்கிறவர்களுக்கு நாம் உதவும்படியாக விரும்புகிறேன். கிறிஸ்து நமக்காக என்ன

செய்திருக்கிறார் என்ற சிறப்பு செய்தியை வைத்திருக்கிறீர்கள். அதை சொல்லுங்க.

**லட்சர்:** எஸ். சிறப்பாக சொல்வேன்னு நினைக்கிறேன், ஜான், ஏன்னா அது ஒரு பெரிய கதை அதை நா சுருக்கமா சொல்லப்போறேன். அது என்னன்னா, ஒரு மனிதன் ஒரு அறைக்குள் நுழைந்து அங்குள்ள பைல்கள் அன்னிதையும் பார்க்கிறான் அவையனைத்தும் அவனுடைய வாழ்வின் சம்பவங்களை கொண்டுள்ள ஏடுகள் என்பதை உணருகிறான். உதாரணமாக, ஒரு பைல்கள் கொண்ட அலமாரியில் என்னக்கு தெரிந்தவர்கள் உடன் ஜெபித்தவர்கள் என்றிருப்பது போள்ளதான். ஆனா இன்னும் வேறு சில பைல்களும் அதில் இருக்கிறது, எனக்கு உண்டான இச்சையான சிந்தனைகள் - அதுதான் பெரியதாக இருக்கிறது. நான் செய்த பலவிதமான பாலியல் பாவங்கள். ஒருவேளை மற்றொரு அலமாரியில் வேறுகாரியங்கள் இருக்கலாம், இணையதளத்தில் நான் பார்த்த காட்சிகள்." இந்த நபர் வேக்கத்தூடு நின்றார், அவருக்கு ஒரேயொரு ஆசைதான் இருந்தது, அந்த அறையை பூட்டி அதன் சாவியை தூர எறிந்துவிட வேண்டும்.

திடீரென்று, அழ ஆரம்பித்தார், யாரோவொருவர் நின்றுகொண்டிருந்தார், அதை அவரால் நண்பா  முடியவில்லை. நோக்கி பார்த்தார், "ஓ! அவரல்ல. யாருமில்ல அவர்தான். யாருமில்லை இயேசுதான். வெட்கத்தால துவண்டுகொண்டிருந்த மனிதனை இயேசு வந்து அவனை கட்டி அணைத்துக்கொண்டார். இயேசு வருத்தமாகவும்

இருந்தார், ஆனா இயேசு இந்த எல்லா பைல்களையும் எடுத்து பார்த்தார் - நூற்றுக்கணக்கான பைல்கள் அங்கு இருந்தன -துரிதமாக, பார்த்துக்கொண்டிருந்தார். இயேசு அந்த எல்லா பைல்களையும் பார்த்துக்கொண்டிருக்கிறார், இயேசு அவனுடைய வாழ்வின் எல்லா காரியங்களையும் பார்த்துக்கொண்டிருப்பதால் அவன் வெட்கம் மற்றும் அவமான உணர்வால் மேற்கொள்ளப்பட்டான்.

இயேசு அதை முடித்தபோது, அவர் அந்த மனிதனிடம் ஒரு அட்டையை காட்டினார், அதில் ஒவ்வொரு பாவத்திற்கு கீழாக இயேசு தம்முடைய பெயரை எழுதி, தனது இரத்தத்தில் கையெழுத்திட்டிருந்தார். அதன் பின்பு இயேசு வந்து, அவனை அணைத்துக்கொண்டு அவனிடம் சொன்னார், எல்லாம் முடிந்தது." அதா, ஜான், சுவிசேஷம் என்பது. இன்றைக்கும் இதை பார்த்துக்கொண்டிருப்பவர்கள் ஒருவேளை அவமானத்தால் மேற்கொள்ளபட்டிருக்கலாம், தங்கள் பாவத்தால் மேற்கொள்ளபட்டிருக்கலாம், அவர்கள் புரிந்துகொள்ள வேண்டிய விஷயம் இயேசு மரிக்கும் முன்பு எல்லாம் முடிந்தது என்று சொல்லியதால் ஒருவேளை அவர்கள் அவரிடம் வர சித்தமுள்ளவர்கலாக இருந்தால் கிறிஸ்துவின் மன்னிப்பில் பங்குள்ளவர்களாக முடியும் என்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** வேடாகமத்தில்  சந்தேகத்தோடு இருந்த சிலரை குறித்து சொல்லி ஜனங்களை உற்சாகப்படுத்திட விரும்புகிறேன்.

**லட்சர்:** யோவான் ஸ்நானகன். இந்த நபர். கிறிஸ்துவின் சகோதரன் என்ற, முறையுடையவர். காவாளில் இருக்கிறார். இயேசு தன்னை காவலில் இருந்து விடுவிக்கும்படியாக விரும்பினார். இன்றைக்கு அர்ப்புதங்களை எதிர்பார்க்கிரவர்களை பொல்லா, அவரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அவர் தனது ஆட்களை அனுப்பி கனிவோடு கேட்கிறார், "வருகிறவர் நீர்தானா வேறொருவர் வர க வேண்டுமா? (மத்தேயு 11:3) அவர் என்ன சொல்லிகார் என்றால், "இயேசுவே, நீர்தான் மேசியா என நினைத்தேன். நீர்தான் அவரா அல்லது வேறோருவாரா? இயேசு அதற்க்கு பதில் ஒல்லி அனுப்புகிறார், "நீங்கள் மரித்தோர்  எழுந்திருப்பதையும், குருடர் பார்ப்பதையும், யோவானுக்கு சொல்லுங்கள் என்று சொல்லி இயேசு, "என்னிமித்தம் இடறலடையாதிருக்கிறவன் பாக்கியவான் என்று கூறினார். நான் என்னுடைய லட்செரியன் விளக்கத்தை சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொழிலை நான் நடத்தும் விதத்தைக்கண்டி இடறலடையாதிருக்கிறவன் பாக்கியவான்." "நல்ல தேவன் எப்படித்தான் செய்வார் என்று தாங்கள் நினைத்தபடி நான் செய்யாததால் சந்தேகிக்காமல் இருக்கிறவர்கள் பாக்கியவான்கள்." "தாங்கள் எதிர்பார்க்கிற பதிலையும் அற்புத்தத்தையும் நஅந் செய்யாததால் செந்தேகப்படாதவர்கள் பாக்கியவான்கள்." என்ன நடந்தாலும் என்னை விசுவாசிக்கிறவன் பாக்கியவான்."

சரி, நமக்கு தெரிந்தவரை, யோவான்ச்னானகன் சந்தேகத்தோடே மரிதிருந்தாலும் இயேசு சொல்லுகிறார், “ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனை பார்க்கிலும் பெரியவன் ஒருவனுமில்லை. (லூக்கா 7:28 ) இன்றைக்கு நான் ஜனங்களுக்கு சொல்ல விரும்புகிறது என்னவென்றால், உங்களுக்கு சந்தேகமிருந்தால், அதுவொன்றும் பெரிய தவறல்ல, உங்களுடைய விசுவாசத்தின் அளவானது, எவ்வளவு சிறியதாக இருந்தாலும், அதிக தடுமாற்றத்தோடு இருந்தாலும், உங்களுடைய விசுவாசம் கிறிஸ்துவின் மீது இருக்க வேண்டும், என்பதே மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. உங்களுடைய விசுவாசம் கிர்ச்துவின் மீது இருந்தால், அந்த உங்களுடைய விசுவாசம் உங்களை இந்த உலகத்திலிருந்து நகர்த்திக்கொண்டு போய், பரலோகத்தில் சேர்த்து விடும்.

இன்னொரு சம்பவத்தை சொல்ல நேரம் இருக்குமா, ஜான்?

**ஆன்கர்பெர்க்:** ஆமா, சொல்லுங்க.

**லட்சர்:** ஒருசில வருடங்களுக்கு முன்பு நான் வாஷிங்டன் டிசியில் ஒரு சபையில் கருத்தரங்கு நடத்திகொண்டிருந்தேன் அங்கு இரகசிய அதிகாரிகளில் ஒருவரும் இருந்தார், அவர் என்னிடம், “வெள்ளை மாளிகைக்கு போக விருப்பமா என்றார்? மேலும் அவர், “ப்ரெசிடென்ட் வார இறுதி நினைவு நாளுக்காக டேவிட் கேம்ப் போயிருக்கிறார்.

அதனால் ஓவல் அலுவகத்திருக்கு போகலாம் என்றார். ஓ! அதற்க்கு நான் வேண்டான்னு சொல்லுவேனா ஜான்?"

நானும் என்னுடைய இரண்டு மகள்களும் அங்கு சென்றோம் சுற்றிலும் காவலர்கள் நின்று கொண்டிருந்தனர். என்னுடைய மகள் பர்சை திறந்து அடையாள அட்டை எடுக்க நினைத்தாள், அதற்க்கு அந்த காவலர், அவரோடதான வந்திருக்கிறீர்கள்? என்றதற்கு ஆமாம் என்றால்.

ஓ! உள்ள போங்க என்றார். நாங்க வெள்ளை மாளிகையின் வாசலுக்குள் நுழைந்தோம். நிறைய காவலர்கள். அவர்கள் அவரையும் பார்த்தனர் எங்களையும் பார்த்தார்கள் மேலும் அவர்கள், அவரோட வந்திருக்கீங்களா? போங்கள் என்றனர்.

உள்ள ஹால்லயும் நிறைய காவலர்கள். அவர்களும் அப்படியே செய்தனர். அப்பறம் என்னோட ஓரக்கண்ணால பார்த்திதேன் எனக்கு ஓவல் அலுவலகத்தி பார்க்க முடிந்தது அந்த அறையின் முடிவில் ஒரு காவலர் நின்றுகொண்டிருந்தார் அவரும் அவரையும் எங்களையும் பார்த்தார். அவர் அழுத்தமாக, சொன்னார், உள்ள போங்க. ப்ரெசிடென்ட் இருக்கும் இடத்திற்கு போகல ஆனா எங்களால ஓவல் அலுவலகத்திற்கு போக முடிந்தது.

இப்ப யோசித்து பாருங்க - கற்பனை செய்து பார்க்கலாம் - எல்லாரும் ஒரே நாளில் மரிக்கிறோம், 9/11 ற்கு பிறகு அதை கார்பனை செய்தவது சுலபமானது. இயேசு நம்மை திரையின் அடுத்த பாகத்தில் சந்தித்து பரலோக பட்டணத்திற்குள் அழைத்தது செல்கிறார். அப்படி போகும்

பொது வழியில் மற்றவர்களும், தூதர்களும், நிற்கிறார்கள். முதல் தூதர் குழுவை நாம் அடைகிறோம். அவர்கள் இயேசுவை பார்கிறார்கள் பிறகு நம்மை பார்த்து கேட்பார்கள், “அவரோட வந்தீங்களா? உள்ள போங்க.”

போகிற வழியில் அதிகமான தூதர்களை பார்ப்போம் அவர்களும் இயேசுவை பார்த்து நம்மிடம் கேட்பாங்க, அவரோட வந்தீங்களா? உள்ள போங்க.” அதற்க்கு பிறகு தேவனை காணக்கூடாத ஒளியில் காண்போம், வேதம் சொல்கிறது, நாம் இந்த பூமியில் நினைத்துபார்காத வகையில் அவர் அழகானவராகவும் பரிசுத்தமானவராகவும் இருப்பார் தேவனுடைய பரிசுத்தம் தேவனுடைய சௌந்தர்யமும் விளங்கும். நமக்கு தெரியும், நம்முடைய இருதயத்தில் சொல்லிக்கொள்வோம், என் கடந்த காலத்தை பார்த்தால், உள்ள போயிருக்க மாட்டேன்.” ஏனென்றால் நமக்கு மத்தியில் கருகலைப்பு செய்த பெண்கள் இருக்கலாம், அசுத்தமான வாழ்க்கை வாழும் ஆண்கள் இருக்கலாம், இரட்சிக்கப்படுவதற்கு முன்பு ஓரினசேர்க்கை வாழ்க்கை முறையை உடையவர்கள் இருக்கலாம். அதாவது, நாமெல்லாரும் பாவிகள் என்ற கூட்டத்தை சேர்ந்தவர்கள். அதனால் நாம், உள்ள போகமுடியாதேன்கிறோம்.” ஆனால் தூதர்கள் சொல்கிறார்கள், “அவரோடு வந்தீர்களா? உள்ள போங்க.”

நாமேலாரும் ஒன்றாக அங்கு சேர்ந்தபிறகு, பிதா குமாரனை பார்த்து சொல்வார், “என்னுடைய பிள்ளைகளை என் வீட்டிற்கு அழைத்து வந்ததற்காக நன்றி ஏனென்றால் நான் அவர்களை அதிகமதிகமாய்

நேசிக்கிறேன் அவர்கலோடிருக்க விரும்புகிறேன். நீங்கள் ஒரு காரியத்தை அறிந்திட விரும்புகிறேன் அவர்களை நான் நன்கு பரிசோதித்துவிட்டேன், அவர்களில் ஒரு குறைவையும் காணவில்லை என்பார்."

அதனால் தான் நான் பாடுகிறோம், "அவருடைய நீதியின் வஸ்திரத்தை அணிந்திருப்பளால், சின்காசனத்திர்க்கி முன்பாக பிளையட்ட்ரவராக நிற்ப்போம்." நமக்கு மத்தியில் சந்தேகிக்கிரவர்களும் இருக்காங்க ஜான், ஆனா அனர்களுடைய விசுவாசம் கிறிஸ்துவின் மீது மட்டும்தான் இருக்கிறது அதனால் நம்மோடு இணைந்து அவர்களும் பரலோக இராஜியத்தில் இணைந்திடுவார்கள்.

**ஆன்கர்பெர்க்:** சார்லாட் ஏலியோட்

**லட்சர்:** எனக்கு தெரியும் சார்லாட் ஏலியோட் எழுதிய ஒரு கவிதை மிகம பிரசித்திப்ர்டதாக இருந்தாது, அவங்க சகோதரன் சொன்னது சரியென்று நம்புகிறேன், "ஒரு, ஊழியனான, என்னக்கு அந்த கவிதையில் இருக்கும் தாக்கம் என்னக்குள் இல்லை என்றார்." அதில் என்ன சொல்லப்பட்டிருந்ததென்றால்: ஒரே ஒரு வேண்டுதலோடு வருகிறேன், என்னக்காக உம்முடைய இரத்தத்தை சிந்தினீர், உம்மிடத்தில் வர என்னை நீர் தகுதியாக்கிநீர், ஓ தேவ ஆட்டுக்குட்டியே, உம்மிடம், வருகிறேன்." இப்ப இதுதான் ரொம்ப முக்கியமானது ஜான், எல்லாரும் கேட்டுட்டு இருக்காங்க. நான் நானாக வருகிறேன், ஒருவேளை பலவித போராட்டங்கள், பலவித பாடுகள்,

சந்தேகத்தோடு இருந்தாலும். உள்ளான போராட்டம் நடுக்கங்கள் இருந்தாலும், தேவ ஆட்டுக்குட்டியே நான் வருகிறேன், நான் வருகிறேன்." ஜான், சந்தேகிக்கிரவர்களுக்கு சொல்கிறேன், கிறிஸ்துவினிடத்தில் வர உம்க சந்தேகங்கள் தீரும் வரை காத்திருக்காதீர்கள். சந்தேகத்தோட வாங்க, ஆனா நீங்க உங்களை இரட்சிக்க வல்லமை யுள்ள ஒருவரிடும் வருகிறீர்கள்.

**ஆன்கர்பெர்க்:** அவர்கள் வர விரும்புகிறார்கள் என்ன நினைக்கிறேன். அவர்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டும். கிறிஸ்துவை நம்புகிறவர்களுக்காகவும் நாம் ஜெபத்திடவேண்டும். சரியாக நாம் ஜெபித்திருக்கிரோமா என்ற எண்ணத்தோடு அவர்கள் காணப்படுகிறார்கள். அவர்களும் தங்களை நிலைபடுத்திக்கொள்ள நல்ல சந்தர்ப்பம். அவர்களுக்காக ஜெபிக்கிரீர்களா?

**லட்சர்:** எஸ். பிதாவே, இயேசுவின் நாமத்தில் இப்பொது இதை கேட்டுக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான  மக்களில் பலரும் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்க முன்வந்திடலாம், அவர்களுக்குள் எப்பேர்பட்ட, சந்தேகங்கள் குடிகொண்டிருந்தாலும் அவை ஒரு பொருட்டல்ல. பிதாவின் பிரசன்னத்திற்குல் தங்களை அழைத்துசெல்ல தகுதியுடையவரிடம் வந்திடட்டும். அவர்கள் இந்த ஜெபத்தை ஏறடுக்க கிருபை தாரும்: பிதாவே, நான் பாவம் செய்திருப்பதை அறிவேன். நான் அபாத்திரன் என்பதை அறிவேன், ஆனாலும் இந்த நேரத்தில், கிறிஸ்துவை சார்ந்துகொள்கிறேன். அவரை

நம்புகிறேன். அவர் என் பாவத்தை சுமந்தாரென நம்புகிறேன் என்னை மன்னிக்க, ஒப்புரவாக்கி, என்னை வீட்டிற்கு அழைத்துசென்றிடுவார்." இவர்களுக்கு இந்த நிச்சயத்தை தாரும், இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

**ஆன்கர்பெர்க்:** இந்த பிரச்சனையை சரிசெய்திட ஒரு வசனம் உங்களுக்கு பேருதவியாக இருந்தது. தேவனுடைய வார்த்தையில் அது எந்த வாக்குத்தத்தம்?

**லட்சர்:** அது யோவான் 10ல் இருக்கிறதென நினைக்கிறேன் அங்கு இயேசு மிக தெளிவாக அதை வெளிபடுத்துகிறார், "என்னுடைய ஆடுகள் என் கரத்தில் உள்ளது, உண்மையில், என்னுடைய ஆடுகள் என் பிதாவின் கரத்திலும் இருக்கிறது." (யோவான் 10:28 -29) நான் கிறிஸ்தவனாக மாறினபோது, என்னை பிதாவின் சமுகத்ஹ்டிற்கு கொண்டுசெல்ல தகுதியுள்ள மேய்ப்பனின் கரத்தில் இருக்கிறேன் என்பதை இந்த வாக்குத்தத்தம் தான் என்னக்கு உறுதியளித்தது.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. எனக்கு உதவியாக இருந்தது, எவனாகிலும் - நான் அழைக்கப்பட்ட நாளில் உறுதியளித்தது - அவருடைய நாமத்தினால் அழைக்கப்பட்டவர்கள் - அதைதான் செய்தேன், அநேகர் என்னோடு இணைந்து ஜெபித்தனர் - தேவன் என்ன செய்வாரென கடைசி 3 வார்த்தை சொல்கிறது -இரட்சிக்கப்படுவான். (ரோமர் 10:13) இருக்கலாம் என்றல்ல, ஒருவேளை அப்படியாகும் என்றல்ல.

“இரட்சிக்கப்படுவான்.” கூப்பிடவேண்டும். நான் கிறிஸ்துவை விசுவாசித்த நாளில், இந்த வார்த்தை என்னக்கு அர்த்தமுள்ளதானது. பிரியமானவர்களே, இந்த காரியங்களை நீங்கள் தியானிக்கும் போது தேவன் உங்களை நேசிப்பதை அறிந்துகொள்வீர்கள் என்பதை நம்புகிறேன். உங்களை கைவிட சட்டரீதியான ஆதாரங்களை அவர் தேடிக்கொண்டிருப்பதில்லை. அதை வேறு விதமாக பார்க்கணும். அவருடையா கரத்தை உங்கள் மீது வைத்துள்ளார். உங்களை பாதுகாத்து பரலோகத்திற்கு அழைத்து செல்ல உங்கள்மீது தமது கரத்தை வைத்திருக்கிறார். அவரை நம்புங்கள் இருதயத்தில் சந்தோசத்தை அனுபவியுங்கள்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.